906

906
4-54

பதிவு எண—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

மல்லிகைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்ருண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனர்.

கிளை—7 குருகுலம், மாம்பாக்கம்; செய. ஐப்பசி, உஎ 12—11—54 தளிர் 6

பாவை நோன்பு

(ஆச்சாரியார் ஸ்ரீமுகம்)

"தெய்வநெறி தழைத்தோங்கவும், அதனுல் மக்கள் ஆண்டவன் அருள் பெற்றுய்யவும் திருவெம்பாவை-திருப்பாவை-திரு மறை-பொன் மொழிகள் உற்றவழி காட்டுகின்றன.

மார்கழி மாதம் முழுவதும் அதிகாலையிலே நீராடி தெய்வீகப் பாவையைக் குறித்து நோற்கப்பட்ட பாவை நோன்பே சேர, சோழ, பாண்டிய நாடுகளாம். மூவேந்த நாடுகளுள்ளிட்ட நம் தமிழ்நாடு முழுவதிலும் நோற்கப்பட்ட நோன்புகளில் முதன்மையாய் விளங்கியது.

இந்நோன்பு சேர நாடாம் மலையாள நாட்டில் ஒவ்வொரு கிராமத்திலும் இன்னும் அனுஷ்டிக்கப்பட்டு வந்தது.

> மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னுளால்
> நீராடப் போதுவீர்! போதுமினோ நேரிழையீர். —திருப்பாவை.
>
> போற்றியாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன் மலர்கள்
> போற்றியாம் மார்கழி நீராடேலோரெம்பாவாய். —திருவெம்பாவை

மார்கழி நீராடல் ஆண்டாள் காலத்திலேயோ, மாணிக்கவாசகர் காலத்திலேயோ ஏற்பட்டதல்ல.

நம் தமிழ் பாடல்களுள் சங்க நூல்களே மிகப் பண்டையனவாகும் சங்க நூல்களில் "பாவை நோன்பு" பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. "பனிநீர் தோயலும் பாவையாடலும்" என்று குறிப்பிட்டிருக்கிறது.

ஸ்ரீமத் பாகவதத்தில் பாவை நோன்பு (காத்யாயனி விரதம் அம்பாள் பூஜை) பற்றி சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகையால் திருமாலை வழிபடுகிறவர்களும், சிவபெருமானை வழிபடுபவர்களும் ஆக இரு திறத்தினரும் அம்பாவாடலாம். பாவையாடல் மூலமாக தம்தம் வழிபாட்டுக் கடவுளின் அருளைப் பேணுவது நம் நாட்டு பண்டை. முறை வழிபாடு.

மார்கழி 30 நாளும் விடியற்காலை நீராடி, கிரிப்பிரதட்சணம் செய்து, இரண்டு அருவி பாயும் திருவேங்கடமலையில் "இரண்டு உருவும் ஒன்ருய் இசைந்து" என்று புகழப்பட்ட நம் ஒரு தெய்வத்தை இவ்விரு பாவைகளாலும் போற்றி பாடுவோமாக.

பள்ளியில் பயிலும் குழந்தைகள் இன்று முதலே பெற்ருேர்கள், ஆசிரியர்கள் ஆசியுடன் இப் பாசுரங்களை மனப்பாடம் செய்யத் தொடங்கவேணும்.

ஆங்காங்குள்ள ஆஸ்திக அன்பர்கள் ஆரம்பப் பள்ளியில் பயின்று வரும் குழந்தைகளுக்கு திருவெம்பாவை—திருப்பாவை—திருப்பள்ளியெழுச்சி பாசுரங்களை மனப்பாடம் செய்விக்கும் பணியிலும், மனப்பாடம் செய்துள்ள குழந்தைகளுக்குப் போட்டிப் பரீட்சை வைத்து பரிசு வழங்கும் பணியிலும் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஈடுபடவேண்டும்.

ணர். நான் எண்ணினேன் "இங்கே அப்பாமட்டுந்தானே இருக்கின்றார் அம்மாவும் இருந்தால் மிகவும் நல்லதாயிற்றே" என்று, ஆனால், திரு. முதலியார் அவர்கள் மாணவர்களிடம் காட்டும், அன்பும் ஆசையும், பரிவும் பாசமும், கருணையும் கருத்தும், அம்மாவையும் விஞ்சுகின்றது. ஆம் தாய் தந்தையரைப் பிரிந்து வந்துள்ள குழந்தைகட்கு "அம்மையப்பனாக" விளங்கி அவர்களை ஆதரிக்கின்றனர் திரு. முதலியார் அவர்கள்.

திரு. ந. ப. தணிகை அரசு அவர்கள் மாணவர்களின் "அண்ணா"வாக இருந்து இல்லத்தின் கண்ணாக விளங்குகின்றார்கள். அண்மையில் பொறுப்பேற்ற சி. கலியாணசுந்தர முதலியார் அவர்களும் மாணவர்களின் அன்பிற்கும் போற்றுதலுக்கும் உரியவராக நல்லவராக விளங்குகின்றார்கள்.

அவ்வில்லத்தில் ஞாயிறு தோறும் விடியற்காலை ஐந்தே முக்கால் மணிக்கு "அவை" ஒன்று கூடுகின்றது. அவ்வவையில் ஏற்றவர்களால் அறவுரைகள் கூறப்படும், அதனால் மாணவர்கள் ஊக்கம் பெறுகின்றனர். உறுதி கொள்கின்றனர்.

அவ்வில்லத்து அமைச்சர்கள் என்னையும் ஒரு ஞாயிறன்று பேச வரும்படி அழைத்தனர், நானும் சென்றேன்.

ஞாயிறு காலை ஐந்தேமுக்கால் மணி, அவ்வவையில் "வாழ்க்கையுங் குறிக்கோளும்" என்பது பற்றிப் பேசினேன் அழகாக வீற்றிருந்த அறு நூற்றைம்பது மாணவர்களும். அமைச்சர்களும் அமைதியாகவும் ஒழுக்கமாகவும் இருந்து ஆர்வத்தோடும் விருப்பத்தோடும் கேட்டனர்.

(வரும்)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீ எஸ். டி. ஸ்ரீநிவாஸன் தமது தலைமைப் பேருரையில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சங்ககாலம்தொட்டு இன்று வரை தமிழ்மொழி வளர்ந்த கதையை விரிவாக எடுத்துரைத்து கள்ளையும் தீயையும் வானவெளியையும் சேர்த்து தெள்ளுதமிழ்ப் புலவர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளாக வளர்த்து வந்த வளர் மொழி தமிழைப் பேணி வளர்க்கவும் இம்மொழியில் செறிந்துகிடக்கும் இலக்கியச் செல்வங்களை பிற மொழியினருக்கு எடுத்துக்கூறி பிரசாரம் செய்யவும் இம்மகாநாடு எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றிக் குறிப்பிட்டார்.

சில யோசனைகள்

இம் மாகாநாடு கவனித்து முடிவு செய்யத் தலைவர் கூறிய யோசனைகள் பின்வருமாறு:—

தமிழ் இலக்கியங்களைப் பரப்பவும் பரவ உதவி செய்யவும், அறிஞர்களும், மேதைகளும் அடங்கிய உத்தியோக பூர்வமில்லாத சம்மேளனம் அமைத்தல், புத்தம் புதிய இலக்கியங்களும், நவநவமான நூல்களும் தமிழில் வெளிவர வேண்டும். அதற்கும் இச் சம்மேளனம் ஆவன செய்ய வேண்டும். குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்கொரு முறையாவது, புகழ்பெற்ற தமிழ் இலக்கியம் ஒன்றின் மொழி பெயர்ப்பு ஆங்கிலம் அல்லது வேறு இந்திய மொழியில் வெளியிடப்பட வேண்டும். இப் பொறுப்பையும் மேற்சொன்ன சம்மேளனம் ஏற்றுக் கொள்ளலாம்.

தமிழ் நாட்டிற்கு வெளியில் வாழும் தமிழர்கள் தனிப்பட்டு வாழக்கூடாது. அவர்களுக்குப் பொறுப்பும் அதிகம். ஆகவே தமிழ் நாட்டுக்கு வெளியிலுள்ள தமிழ்ப் பள்ளிகளில் பணிபுரியும் தமிழாசிரியர்கள் ஹிந்தியில் பாண்டித்யம் பெற உதவுவது தமிழ் நாட்டிற்கு வெளியில் தமிழர்கள் வெகுவாக வாழும் நகரங்களில், அங்குள்ள இளம் எழுத்தாளர்களுக்கு ஊக்கமளிக்க தமிழ்ப் பத்திரிகைகள் ஆரம்பத்தில் நாடு முழுவதற்கும், எல்லா மொழிகளுக்கும் ஒரே 'லிபி' இருத்தல் அவசியம் இதற்கான வைகளை யோசித்தல்

—சு.

Phone. 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்

சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53 கிடங்குத் தெரு. சென்னை 1

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம்; மாம்பாக்கம், மதுராந்தகம் (அஞ்)

வாழ்வளிக்கும் இல்லம்

(வே. ந. நாராயணன்)

ஆம்! வாழ்வளிக்கும் இல்லந்தான் வள்ளலார் மாணவர் இல்லம். உண்மை, வெறும் புகழ்ச்சி இல்லை. கண்டவர் வியந்து கருத்துடன் போற்றும் தண்டமிழ் நாட்டின் தனிப் பெருங் குருகுலம்.

அது ஒழுக்கத்தின் உறைவிடமாக, உண்மையின் நிறைவிடமாக, நம்பிக்கையின் நல்வீடமாக, நன் மக்களின் பிறப்பிடமாக மிளிர்கின்றது.

வாலாஜாபாத்தின் பாலாற்றங் கரையிலே, பறவைகள் பாடிப் பாவும் பசுமைச் சோலையின் நடுவே, பார்வைக்கழகாக, பயனுக்குகந்ததாகக் காட்சியளிக்கின்றது, வள்ளலார் மாணவர் இல்லமும், இந்துமத பாடசாலையும்.

இவ்வில்லம் ஏழை மாணவர்களின் இனிய நாடு, குழந்தைகள் வதியும் குறைவற்ற வீடு, சிறுவர்கள் ஆடும் சிங்காரத் தோட்டம்.

இந்துமத பாடசாலை 820 மாணவ மாணவிகட்குக் கல்வி கற்பிக்கின்றது, வள்ளலார் மாணவர் இல்லம் ஏழை மாணவர்கள் 650 சிறுவர்கட்கும் ஆதரவளிக்கின்றது, வாழ்வளிக்கின்றது, கல்வி கற்பிக்கின்றது.

ஏட்டுக் கல்வி மட்டுமின்றித் தொழிற் கல்வியும் அளிக்கின்றது, பேச்சுக் கல்வி, இசைக் கல்வி, நாடகக் கல்வி, முதலியனவும் பயிற்றுகின்றது.

அங்கே அந்தணர் வீட்டுக் குழந்தைகளும், ஆதி திராவிடக் குழந்தைகளும், செல்வர் வீட்டுப் பிள்ளைகளும், ஏழைக் குடும்பத்துப் பிள்ளைகளும், ஒற்றுமையுடன் கற்கின்றனர்.

எனவே, சாதி, பேதம் காண முடியாது; உயர்வு தாழ்வு காண முடியாது அங்கே.

உயர்வு தாழ்வற்ற உன்னத சமுதாயம் அது பாரத நாட்டின் பல இடங்களிலிருந்தும் சிறப்பாகத் தமிழ் நாட்டின் பல கிராமங்களிலிருந்தும் சிறுவர்கள் வந்து வந்து கல்வி கற்கின்றனர், இல்லை வாழக் கற்றுக் கொள்கின்றனர்.

மாணவர்கள் வள்ளலார் இல்லத்தில் உறைந்து இந்துமத பாடசாலையில் கற்கின்றனர்.

உடலுக்கேற்ற சத்துள்ள உணவும் உள்ளத்திற்குகந்த உண்மையுள்ள உணர்வும் ஒருசேர அங்கே அளிக்கப்படுகின்றன. ஆம் இலவசமாக அளிக்கப் படுகின்றன.

அங்கிருந்து கற்று வெளியேறும் ஒவ்வொரு மாணவர்களும் "நான் வாழ்க்கையை அறிந்து கொண்டேன் வாழக் கற்றுக் கொண்டேன்" என்ற உறுதி உள்ளத்தோடு வெளியேறுகின்றனர்.

இந்துமத பாடசாலையின் சுவரெல்லாம் திருக்குறள்கள், தூணெல்லாம் பொன்மொழிகள் அழகாக அமைந்து அங்கிருக்கும் சிறுவர்கட்கு அறிவூட்டி உணர்வூட்டி ஆற்றலெலாம் மிக ஊட்டி நிற்கின்றன.

அங்குவளர்கின்ற பிள்ளைகள், பண்பும், பக்தியும், அன்பும் அடக்கமும், அறிவும் ஆற்றலும், ஒழுக்கமும் உண்மையும் பெற்றவர்களாக விளங்குகின்றனர்.

அத்தகைய உயர்ந்த நிலையில் மாணவர்களை வாழ்விக்கும் இல்லத்தை, பாடசாலையைச் சிறந்த முறையில், பயனுள்ள முறையில் நடத்தும் திரு-மாசிலாமணி முதலியார் அவர்கட்கு நாம் நன்றி தெரிவிக்கத்தான் வேண்டும்.

கல்கியார் கூறியதுபோல் "ஒன்றும் இயலாதவரின் உயர் பெருஞ்சாதனை"யில் உருவான இந்து மத பாடசாலையும் வள்ளலார் இல்லமும், "என்றும் இல்லை இணை" என்று சொல்லும்படி ஏற்றம் மிக உற்று எவரெஸ்ட்டாக விளங்குகின்றன.

பல அரசியல் தலைவர்களும் அறிஞர் பெருமக்களும், சான்றோர்களும், செல்வந்தர்களும், இதழாசிரியர்களும், பிறநாட்டவர்களும் அங்கு வருகைபுரிந்து வியந்து பாராட்டி வாழ்த்திச் செல்வதுடன் பெருமகிழ்வும் போதாதவும் காட்டுகின்றனர். இன்னும் ஏனையவர்களும் வந்து பள்ளியின் செயற்றிறனைக் கண்டு பாராட்டிப் போதரவும் தரத்தான் வேண்டும்.

தங்கள் குழந்தைகளை அன்போடும், ஆதரவோடும் கருத்தோடும், கனிவோடும் வளர்த்த பெற்றோர்கள் அக் குழந்தைகளை—அவர்களின் உயிர்ச் சொத்தை உள்ளம் விரும்பி இங்கே அனுப்பி வைக்கின்றனர், பிரிந்து இருக்கின்றனர் என்றால் அப் பெற்றோர்கள் இப்பள்ளியின்பால் கொண்டுள்ள நம்பிக்கைதான் எவ்வளவு என்று பாருங்கள்.

தாய், தந்தையரைப் பிரிந்து வந்துள்ள சிறுவர்கள் திரு. முதலியார் அவர்களை "அப்பா" என அழைத்து ஆறுதல் உறுகின்றனர்; இல்லை அகமகிழ்கின்ற

பெற்று அமைக்கும்படி ஆசிரியர் அவர்கள் பணித்திருக்கிறார்கள்.

1 திரு. டி. ரா. சம்பந்தம் ஆ.
இராயப்பேட்டை

2 க. ம. தங்கவேல்
சைதை

3 க. உலகநாதன்
பெத்துநாய்க்கன்பேட்டை

4 M R சீனிவாசன்
பார்க்டவுன்

5 T S மன்னர் செட்டியார்
சூளை

6 பரமசிவம்
புரசை

7 R நடராசன்
திருவல்லிக்கேணி

8 P V குப்புசாமி
கிராமணியார்
திருவேட்டீசுரன்பேட்டை

9 மாரிமுத்து முதலியார்
முத்தியாலுப்பேட்டை

10 சிவக்கொழுந்து முதலி[யார்
பிரம்பூர்

11 இரத்தினவேல் முதலி[யார்
வண்ணை

குறிப்பு:-

ஸ்ரீ கந்தர் சஷ்டியை ஒட்டி வன்னிய தேனும் பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் 30, 31-10-54 நாட்களில் நடைபெற்ற குருகுலத்தார் வழிபாட்டின்போது இம் மன்றத்தை அமைப்பது பற்றிய எண்ணம் வலுப் பெற்று 31-10-54 ல் ஒரு நன்முயற்சியாக மலர்ந்தது. அத் திருக்கோயிலிலேயே இது பற்றிய அறிக்கை ஒன்று திருவடி வழிபாட்டுக்குப் பின் ஆசிரியர் அவர்கள் திருமுன்னிலையில் எழுதப் பெற்று, வந்திருந்த குருகுல அன்பர்களிடம் படித்துக் காட்டப்பெற்றது. அங்கேயே 40 பங்குகள் வரை அன்பர்கள் எடுத்துக்கொண்டார்கள். அடுத்துச் சென்னைச் சிவனடியார் திருக் கூட்டத்தில் அன்று மாலை நடைபெற்ற 'இருபா இருபஃது' வகுப்பில் இதுபற்றித் தெரிவித்த போது உடனே 64 பங்குகள் சேர்ந்தன.

தத்தம் பங்குகளுக்கு விருப்பமுள்ளவர்கள் முந்துவது நல்லது. இதுவரையில் 250- பங்குகளுக்குமேல் சேர்ந்துள்ளன. அமைப்புக் குழு விரைவில் அமைக்கப்பெற்று அதன் தலைவர், செயலாளர், பொருளாளர்கள் அமைக்கப் பெறுவார்கள்; வரையறைப் பதிவும் ஆகும்.

பங்குகள் எடுத்துக்கொண்டவர் பெயர்களும் பங்குகளின் அளவும் விரைவில் வெளிவரும்.

—ந. ரா. ஆடலரசு.
குருகுலச் செய்தியாளர்.

மாதர்களின் கடமை

(மாம்பலம் மாதர் சங்க விழாவில்)

'இதர நாடுகளைவிட நம் நாட்டில்தான் பெண்கள் சிறந்து விளங்குகிறார்கள். ஆண்களோடு போட்டிபோட்டுக்கொண் டிருந்தால் இவ்வளவு முன்னணிக்கு வந்திருக்க முடியாது. அவரவர்களுக்குரிய கடமைகளை அவரவர் செய்ய வேண்டும் பெண்கள் தங்களுக்கு இயற்கையாக உள்ள கடமைகளை, குறிப்பாக குடும்பக் கடமைகளைச் செய்து வந்தால் இன்ப வாழ்க்கை ஏற்படும்.

நம்முடைய நாட்டில் பெரிய யந்திரங்களுக்கு அவசியம் இல்லை. மனித சக்தி அளவற்றுக் கிடப்பதால் அதைஎப்படிப் பயன்படுத்துவது என்பதற்கு வழி கண்டுபிடித்தல் போதும். ஓய்வு நேரத்தில் உபயோககரமானகாரியங்களைச் செய்ய வேண்டும்.'

—கல்வி மந்திரி
ஸ்ரீ. சி. சுப்பிரமணியம்.

'மாதர்கள் தங்கள் முக்கியக் கடமைகளை' குடும்பக் காரியங்களுக்குப் பாதகமில்லாமல், தங்களுக்கு ஒழிந்த வேளைகளில் தங்கள் முன்னேற்றத்துக்கான விஷயங்களைக் கற்க வசதி அளிப்பதே இச்சங்கத்தின் முக்கிய நோக்கம். இதற்கென இச் சங்கம் ஹிந்தி உட்படப் பொதுக் கல்வி, சங்கீதம், பரத நாட்டியம், தையல்வேலை, சர்க்கா நூற்பு வகுப்புகளை நடத்தி வருகிறது. 100-க்கு மேற்பட்ட புத்தகங்கள் அடங்கிய நூல் நிலையம் உள்ளது.'

—டாக்டர்
ஸ்ரீமதி வி. ஸி. அங்குளி.

'விவாக ரத்துக்கு வகை செய்யும் விசேஷ விவாக சட்டம் பற்றி மாதர் சங்கங்கள் அபிப்பிராயம் சொல்ல வேண்டும்; வேலைக்காக ஆண், பெண்கள் போட்டியிட்டால் பரவாயில்லை, தகுதியுடையவர்களுக் கெல்லாம் வேலை கிடைக்கச் செய்ய வேண்டியது சர்க்கார் கடமை; ஆனால் பெண்கள் குமாஸ்தா வேலைக்குச் செல்லாமல் சங்கீதக் கலையில், உபாத்திமைத் தொழிலில் விசேஷ கவனம் செலுத்தினால் நல்லது நடுத்தர வகுப்பினர்களை அங்கத்தினர்களாகக் கொண்டு திகழும் இச்சங்கம் இவ்வட்டாரத்துக்கு வழிகாட்டியாக விளங்கும்.'

—ஸ்ரீ. ஸி. ஆர் ராமசாமி
(எம். எல். ஏ)

குருகுலச் செய்தி:

குருகுலக் கூட்டுறவு மன்றம்

குருகுலம் வாழ்க்கை மறையாகிய திருக்குறள் வழி இயங்குவது. ஆகலின், அதன் தொண்டுகளும் அதனைச் சார்ந்தவர்கள் செயல்களுமெல்லாம் வாழ்க்கை நோக்கத்தோடு, திருக்குறள் வழியில் மேல் மேல் வளர்ச்சி முறையில் நடைபெற வேண்டும்.

சென்னையில் குருகுலத்தார் சூழல் மிகுதி. குருகுலப் பணித்திட்டப்படி நடைபெற வேண்டிய மன்பதைத் தொண்டுகளின் அடிப்படைகள் அங்குத்தான் சிறப்பாக நடைபெற வேண்டும்; நடைபெற வாய்ப்பும் இருக்கிறது.

அதற்கு, முதலில் குருகுலத்தார் சூழல் மேலுமேலும் கட்டுப்பாடாகவும் பயன் முகமாகவும் அமைதல் முதன்மையாகும்.

குருகுலத்தார் சார்பில் ஒரு 'கூட்டுறவு மன்றம்' நிறுவும் வாய்ப்பு இப்போது நேர்ந்திருக்கின்றது. அதன் சார்பில் பொருள் ஆக்கத்திற் கேற்ற சில தொழில்கள் செய்யலாம். ஒரு சிற்றுண்டிச் சாலையும் அதனைச் சேர்ந்தாற்போல ஒரு பண்டக சாலையும் குருகுலத்துக்குத் தேவையுள்ளன. குருகுலச் சூழலில் உள்ளோர்க்கும் அதனால் ஆக்கம் உண்டாகும்.

பங்கு ஒன்று 'ஐந்து ரூபா'வாக ஒருவர் தம் வசதிப்படி இருபது வரையில் பங்குகள் எடுக்கிற முறையில், முதலில் 1000-பங்குகள் தொகுத்து, மேற்கண்ட அமைப்புகளை ஓர் அளவில் நடத்தியும், வர வர உயர்த்தியும் நலங்காணலாம் என்று தோற்றுகிறது.

குருகுலத்தின் கொள்கைப்படி இப்பொருண் முயற்சியை ஓர் எடுத்துக் காட்டான முறையில் உண்மையாகவும் திறமையாகவும் நடத்தி ஆக்கம் காணவேண்டும். ஆசிரியர் இம் முயற்சிக்கு இசைவு தந்திருக்கிறார்கள்.

எனவே, குருகுலத்தார் அனைவரும் இவ்வகையில் பெரிதும் கருத்திருத்தித் தக்க குறிப்புகளை கொடுத்துப் பங்குகளையும் எடுத்து நலம் உண்டாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வகையில் குருகுலத்தாரின் ஆதரவு நிலையை முதலில் தெரிந்துகொண்டால்தான், அரசாங்கக் கூட்டுறவு அமைப்புகளின் பதிவாளரோடு தொடர்பு கொண்டு மன்றத்தை அமைக்கவும், அதன் நடைமுறை ஒழுங்குகளை வகுக்கவும் முடியும். ஆதலின், விருப்பமுள்ள குருகுலத்தார் அனைவரும் தாம் தாம் எடுத்துக்கொள்ளக்கூடிய பங்குகள் எத்தனை என்பதைக் கீழே குறிப்பிட்டுள்ளவர்களிடம் உடனே தெரிவித்துத் தொகையையும் கூடிய விரைவில் செலுத்திவிட வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திருக்குறளின் பெரும் பிரிவுகளில் இம் முயற்சி பொருட்பாலைச் சேர்ந்த ஒரு மொத்த அடையாளமாகும்; இது, பொருள் ஆக்கத்துக்கு உதவும். ஏனை அறத்துப் பாலுக்கும் இன்பப் பாலுக்கும் இப்படியே மொத்த அடையாளச் செய்கைகள் அறத்தின் ஆக்கத்துக்கும் இன்பத்தின் ஆக்கத்துக்கும் இக் கூட்டுறவு மன்றச் சார்பிலேயே இனிக் காணப் பெறும். இன்ப ஆக்கம் என்பது கலையின்ப ஆக்கமாகும்.

திருக்குறள் அதிகாரப் பிரிவுகளின்படி தனித் தனி அதிகாரச் செய்கைகள் தலைமை நிலையமாகிய மாம்பாக்கத்தில் நடப்பது வேறு.

மன்றத்தைக் காண்பதற்குக் கீழ்க் கண்டவர்கள் அடங்கிய அமைப்புக் குழு (Organizing Committee) ஒன்றை இசைவு

அன்னையாரது திருவாக்காக மிளிரும் ஒரு மூன்றினை இங்கே கவனிப்போம்:-

'எவரையும் குறை கூறாதே கொண்டியானாலும் அவனை நொண்டியென்றும், எப்படி வந்தது என்றுங் கூடக் கேட்காதே'

'எதையும், விளக்குமாற்றினையுங்கூட அலட்சியமாகக் கருதாதே'

'எவ்வெவர் ஆயினும் எனக்கவர் சேயே, அவ்வர் குறை நான் அறிய விரும்பிடேன்; இத்தகைய வரமருள் இறைவ' என்று பிரார்த்திக்கின்றார் அன்னையார்.

—சு.

Telegrams: "RAMBROS"

N.Ramu Bros,

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

துக் கீர்த்துச் செல்லும் அற்ப மாயைப் பொருளாகத் தோற்றமளிக்கவில்லை. பேயென்று வெருண்டு தாமும் ஓடவில்லை அன்னையாரையும் ஓட்டி விரட்டவில்லை. உலகில் அவருக்குள்ள உரிமையை வழங்குகிறார்.

'கணவன் என்ற முறையில் நீ எனக்குக் கடமைப்பட்டவள்.... அதேபோல் என் மனைவி என்ற முறையில் நான் உனக்குக் கடமைப் பட்டவன்....' என்று, விழுந்து தொழுது எழுந்து நின்ற அன்னையாரைப் பார்த்து மந்தகாசமான முகத்துடன் ஆரம்பிக்கிறார். என்ன தைரியமும் கம்பீரமும் பொருந்திய வார்த்தைகள்! பெண்தான் ஆணுக்குக் கட்டுப்பட்டவள் என்ற அன்றைய உலக நடைமுறைக்கு எத்தனைப் பெரிய அதிர்ச்சி! சாதாரண மனிதன் ஒருவனிடமிருந்து எழுந்த வார்த்தைகளல்ல இவை ஐம்புலன்களையும் வென்று துறவி வேந்தாய்த் திகழ்ந்த நம் பகவான் வாயிலிருந்து அல்லவா இவை எழுந்தன! சஹதர்மிணிக்குள்ள சம உரிமை உலகங் காண வழங்குகிறார்.

ஆத்மீக இணக்கம்

மேலும் சொல்வதைப் பார்ப்போம் 'நான் இப்போது எல்லாப் பெண்டிரையும் ஜகதாம்பிகையாகக் காண்கிறேன் உலக மக்கள்போல் வாழுவதென்பது கஷ்டம். நீ என்ன கூறுகிறாய்? என்போல் ஞானநிலை அடைய விரும்புகிறாயா? உனது விருப்பம் யாது?

இவ்விதம் கேட்டுவிட்டு அன்னையாரின் பதிலை ஆவலோடு எதிர் பார்க்கிறார். இவ்வார்த்தைகள் மூலம் சம உரிமையல்ல அதற்கும் அதிகமான உரிமையைப் பெண் உலகம் பெறுகிறது தாம் மனைவிக்குக் கடமைப்பட்டவர் என்று கூறியவர் மனைவியின் விருப்பத்துக்கு இணங்கித்தானே ஆக வேண்டும்!

அன்னையார் அண்ணலினும் பிறப்பட்டவர் அல்லர் என்கிறோம். அது இங்கே அன்னையார் அளித்த பதிலிலிருந்து அறியப்படுகிறது.

'தங்களை நான் இழி நிலைக்கு இழுத்துத் தள்ள விரும்பவில்லை உங்கள் சிஷ்யையாகி உங்களைப் பின்பற்றவே விழைகின்றேன் என்று கூறுவாரானால் அன்னையாரது பெருமையைப் பற்றி என்னவென்று சொல்வது! வேறுவிதமான பதில் வந்திருந்தால் பரிபூரண உதாரண புருஷாக நம் அண்ணல் விளங்கியிருக்க மாட்டார் என்பதில் ஐயமில்லை. ஏதோ சில துறவியர்க்கு மட்டும் எடுத்துக்காட்டாயிருந்திருப்பார். பொதுப்பட்ட உலக மக்களுக்கு எட்டியவராகப் போய்விட்டிருப்பார்.

விவாகத்தை நடத்தி வைத்தவர்களது எண்ணம் ஒன்று, ஆனால் நடந்தது வேறு. உண்மையான இணக்கம் எதுவோ அது முறைப்படி நடந்தேறியது. உடல் உறவற்ற அழியாத ஆத்மீக இணக்கம் பொருந்தியதாக அமைந்தது இவ்விருவாது புனித இல்லற வாழ்க்கை. இதுதான் இல்லற வாழ்க்கையின் குறிக்கோள். வெறும் உடல் உறவோடு நின்றுவிடும் உலக மக்கட்கு அதனினும் பெரிய வாழ்க்கையுண்டு, அது அழியாத பெரு வாழ்க்கை. ஆத்மாவோடு சம்பந்தப்பட்டது. அதனால் உண்டாகும் ஆனந்தம் எல்லையற்றது. தாமும் உண்டு மற்றவரும் பகிர்ந்துகொள்ள உதவுவது என்பது எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது, இவர்களது வாழ்க்கை மூலம்!

அன்னையார் அண்ணலுக்கு மனைவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் பிறகு தம்மை அவருக்குச் சிஷ்யையாக்கிக் கொள்கிறார். கடைசியில் அண்ணல் பூசிக்கப்பெறும் ஜகதாம்பிகையாகக் காட்சி கொடுக்கிறார் அன்னையின் பெருமை எத்தகையது பாருங்கள்!

அவர் அம்பிகையின் அம்சம் என்றாலும் அதனை அவர் வெளிக்குக் காட்டாது அந்தர் முகமாக வைத்திருந்ததே அவரது பெருமையைக் காட்டுகிறது சாதாரணப் பெண்போல்தான் அவர் அன்றாட வாழ்க்கையைக் கவனித்து வந்தார். எனினும் அவர் உள்ளம் எப்போதும் எல்லையற்ற பரம்பொருளோடு ஈடுபட்டிருந்தது என்பதனை அவர் வார்த்தைகளும் தம்மைச் சூழ்ந்தவர் மாட்டுச் சதா வீசிக்கொண்டிருந்த ஆத்மீக அலைகளும் சான்றுகளாக இருக்கின்றன.

அவர் தம்மை வந்து சரண் அடைந்த ஆடவர், மகளிர்க்கு அளித்த ஆறுதல் வார்த்தைகள் அநேகம். அன்று வந்தவர்க்கு மட்டுமன்றி இன்று அவற்றைப் படித்துச் சிந்திப்பவர்க்கு ஆறுதல் அளிக்கும் சக்தி வாய்ந்தவை. இந்த நூற்றாண்டுக் காலத்திலே அவற்றின் பலன்களைப் பெறுவதற்கு முயற்சிப்போம். அன்னையாரது அருள் சக்தி நம் அனைவர்க்கும் கிடைப்பதாக!

அன்னை சாரதாமணி தேவியார்

அண்ணலை அடைந்த விதம்

அன்னை அண்ணலாரை அடைந்த விதம் ஒரு வேடிக்கை எனலாம்.

தக்ஷிணேஸ்வர ஆலயத்திலே பகவான் ஞானப் பித்திலே மூழ்கி விட்டார். அங்குக் கோயில் கொண்டெழுந்தருளிய அம்பிகைக்கு ஆற்றவேண்டிய பூசா காரியங்களை அவரால் சரிவர கவனிக்கமுடியாமற் போய்விடுகிறது. தேவி தரிசனம் பெற வேண்டும் என்ற ஒன்றே அவர் மனத்தைப் பிடித்துப் பேயாய் அலைக்கது. அதனால் தம் தொழிலை மறந்தார்; அதனால் வரும் ஊதியத்தை மறந்தார்; தமது ஊணை மறந்தார். உலகமே அவருக்கு இல்லாது ஒழிந்து விட்டது. அவர் தம் மேலாம் நிலையை மக்களால் அறிந்து கொள்ள முடியவில்லை. பொன்னையும் பொருளையுமே பெரிதாக எண்ணும் உலகம் அவருடைய உன்னத மனநிலையை எங்ஙனம் உணர்ந்துகொள்ள முடியும்? அவருடைய செயல்களைப் பித்தன் செயல் என்று எள்ளி நகையாடினர். வெகு தொலைவில் கிராமத்திலிருந்த தாய் சந்திரமணிக்குச் செய்தி எட்டுகிறது தன் கடைசி மகன் குறித்து மனம் வெதும்புகிறாள். எங்ஙனம் மகனை நல்வழிப்படுத்துவது என்று கவலைப்படுகிறாள். தன் மூத்த மகன் ராம்குமார், உற்றார் ஊர்ப் பெரியார் துணை கொண்டு ஆராய்கிறார் மிதமிஞ்சிய பக்தி, அளவுக்கு மீறிய ஞானம்தான் அவரது பயித்தியத்திற்குக் காரணம் என்று அறிகிறார்கள். அந்த உயர்நிலைக்கு அவர்கள் வழி கோலவில்லை; அதிலிருந்து அவரை எப்படிக் கீழிறக்குவது என்பதுபற்றி யோசித்து வழி கண்டுபிடிக்கப் படுகிறது. அவர்கள் கண்ட வழியென்ன? அற்புதமான வழி அது! பருவமுள்ள அழகிய நங்கையொருத்தியை அவரோடு இணைத்துவிடுவது என்பதுதான். அம் முடிவை நிறைவேற்றப் பகீரதப் பிரயத்தனமும் செய்யப்படுகிறது.

இங்கே பெண் எத்தகைய 'உயர்ந்த' காரியத்துக்குப் பயன்படுத்தப்படுகிறாள் என்பதனை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அப்போதைய உலகம் பெண்ணினத்துக்குக் கொடுத்த மதிப்பு இதுவே எனலாம். அதாவது புனித வாழ்க்கைக்குப் பெண்பயன்படமாட்டாள் என்பது மாத்திரமல்ல, குந்தகமாக இருப்பாள் என்பதாகிறது பகவான் இதனைப் பொய்ப்பித்துவிடுகிறார். அதற்கு அன்னையாரது ஒத்துழைப்புச் சிறிது என்று கூறுவதற்கில்லை, அன்னையாரது பங்குதான் சற்று அதிகம் என்னலாம்

விவாகம் நடக்கும்போது அன்னையாருக்கு வயது ஐந்து; அண்ணலுக்கு இருபத்துநான்கு. மணம் முடிந்து நாட்கள் மாதங்களாகி, ஓடி மறைந்தன. அன்னையார் தக்க பருவம் அடைகிறார் தம் கணவர் பித்தனாகத் திரிகிறார் என்று பலரும் கூறக்கேட்டு மனம் வெதும்புகிறார். 'கல்லானாலும் கணவன், புல்லானாலும், புருஷன்' என்ற நம் தேசத்துப் பழமொழிப்படி, கணவன் பக்கல் இருப்பதுதான் தம் கடமை என்று அவர் இருந்த தக்ஷிணேஸ்வரம் செல்கிறார். தம் ஊராகிய ஜெயராம்பட்டிக்கும் தக்ஷிணேஸ்வரத்துக்கும் உள்ள எண்பது மைலும் நடந்தே கழிக்கப்படுகிறது.

அன்னையார் தக்ஷிணேஸ்வரம் சேரும்போது தம் கணவர் பூரண ஞானி; யாவரும், யாவும் அவருக்குத் தெய்வ சொரூபங்கள். காமம், புகழ், பொருளைக் கடந்த அதீத நிலை. ஆண் பெண் பேதமொழிந்த மேலாம் நிலை. 'தந்தை யார், தாயார், எவர் உறவினர், எவர் பகைவர்' என்ற பேதமற்ற அதியுயர்ந்த ஒப்பற்ற நிலை. அங்கே மனைவிக்கு இடம் ஏது! அந்த நிலையில் உள்ள கணவர் 'தம்மை ஏற்பாரோ; புறக்கணிப்பாரோ, பெண்பேய் என்று விரட்டுவரோ' என்னும் பயம் உள்ளத்தை வாட்ட, மிகப் பணிவோடு அண்ணலை அணுகுகிறார். அன்னை அருகில் செல்கிறார் அடிக் கமலங்களில் வீழ்ந்து வணங்குகிறாள்.

பகவானின் முடிவு

ஞான நிலையில் உள்ள பகவான் ஒன்று அன்னையாரை ஏற்க மறுக்கவேண்டும் அல்லது உலகத்தவர்போன்று பெண் மயலில் சிக்குண்டு கீழ்நிலையெய்த வேண்டும். வேறுவிதமாக நடந்திருப்பதை நாம் கண்டதுமில்லை; கேட்டதுமில்லையல்லவா? அவரது ஞான நிலையைக் கலைக்கும் நோக்கத்தோடுதான் அவருக்கு விவாகம் செய்யப்பட்டது என்பதனையும் நாம் அறிவோம்.

ஆனால் என்ன நடக்கிறது? என்றுமில்லா உயர்ந்த நிலையைப் பெண்ணுலகம் எய்துகிறதைப் பார்க்கிறோம். அந்தப் பவித்திரப் புருடருக்குப் பெண் இழிநாகத்

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

7-ம் ஆண்டுக் கையொப்பம்

(8-10-54 முதல்)

உள்நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0
ஆயுள்—				
கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.

மலர்	செய, கார்த்திகை,	தளிர்
7	19-11-54 வெள்ளி.	7

ஜம்ஷெட்பூர் தமிழ் மகாநாடு

அக்டோபர் 15, 16, 17 தேதிகளில் ஜெம்ஷட்பூரில் ஐந்தாம் தமிழ் மகாநாடு சிறப்பாக நடைபெற்றது.

இம்மகா நாட்டில் கல்கத்தா பாரதி தமிழ்ச்சங்கம், தமிழ் மாணவர் மன்றம், டெல்லித் தமிழ்ச் சங்கம், பம்பாய் தமிழ்ச் சங்கம், புனா கலைக்கழகம், ஹெளரா திருவள்ளுவர் கலை மன்றம், ஜமால்பூர் தமிழ்ச் சங்கம் ஹிராகூட் கலாசாரக் கழகம். ரான்ஜி தென்னிந்திய சங்கம், சக்ரதர்பூர் தென்னிந்திய சங்கம், ஜேம்ஷட்பூர் மதராஸி ஸம்மேளனி டெல்கோ தமிழ்ச் சங்கம், மதராசி ஸம்மேளனி அக்ரிகோ, கோல்மூரி தென்னிந்திய சங்கம், தென்னிந்திய சங்கம் கத்மா, ஜெம்ஷட்பூர் தக்ஷிண பாரத மகிள சமாஜ், கல்கத்தா அமெச்சூர் நாடக சபை, கல்கத்தா நாடகக் கலைக் கழகம் ஆகிய அமைப்புகளின் பிரதி நிதிகள் கலந்துகொண்டார்கள்.

பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட விசாலமான பந்தலில் மகாநாடு ஆரம்பமாகியது.

பீகார் பல்கலைக் கழகத் துணை வேந்தர் லெய். கர்னல் ஸ்ரீ ஷியாம் நந்தன ஸாஹாய் தமது துவக்க உரையில் குறிப்பிட்டதாவது:—

வாழ விரும்பும் எந்த மொழியும் தனித்து இருக்க முடியாது. தம்மிடமிருந்து பிற மொழிகளுக்கு அள்ளி வழங்கியும் பிற மொழிகளிடமிருந்து தயங்காது தன்னுடன் சேர்த்துக்கொள்ளும் மொழிதான் வாழும் மொழி.

இந்த நாட்டில் ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் சாதனைகள் உண்டு. ஆயினும் இந்த நாட்டின் முன்னேற்றத்திற்கு இந்த நாட்டின் புகழுக்குத் தமிழ் நாடு செய்திருக்கும் சாதனைகள் அனந்தம். தமிழ் நாட்டிற்கு பாரத நாடு முழுவதும் மிகவும் கடமைப் பட்டிருக்கிறது. இன்றைய தினம் ஹிந்து தர்மம், ஹிந்து பண்பாடு ஆகியவை இந்நாட்டில் நிலைத்திருக்கிறதென்றால் அதற்குக் காரணம் தெய்வத் தமிழ்நாடுதான். தளர்ந்த நிலையிலிருந்த ஹிந்து மதத்திற்குப் புத்துணர்வையும் புது மலர்ச்சியையும் தந்த பெருமை தென்னாட்டில் தோன்றிய ஸ்ரீ சங்கராச்சாரியார், ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ மத்வாச்சாரியார் ஆகியவர்களுக்கே உரியது.

உன்னதமான கலைச் செல்வங்களை காணவேணடுமென்றால் நாம் எங்கே போக வேண்டும்? தமிழ் நாட்டிலுள்ள ஊர்களுக்குச் செல்லுங்கள். ஒவ்வொரு ஊரிலும் உள்ள திருக்கோயில்கள் கலைப் பொக்கிஷங்களைத் தன்னகத்தே கொண்டு திகழ்கின்றன. இது உண்மை. வெறும் புகழ்ச்சியில்லை.

கல்வியில் சிரத்தையுள்ளவர்களுக்கு ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். ஒவ்வொரு ராஜ்யத்திலும் அவ்விராஜ்யம் மொழி தவிர வேறு ராஜ்ய மொழிகளில் ஒன்று எல்லா சர்வகலாசாலைகளிலும் போதிக்கப்பட வேண்டுமென்று யோசனையை நான் முழு மனதுடன் ஆதரிக்கிறேன்.

இதுபற்றி பீகார் சர்வகலாசாலை யோசித்து ஜெம்ஷட்பூர் கல்லூரிகளில் தமிழ் மொழி கற்பிக்க வேண்டிய வசதிகளை செய்து கொடுக்கும் என்று உறுதி கூற விரும்புகிறேன். இந்த யோசனைக்கு சர்வகலாசாலையின் ஆதரவு மட்டுமன்றி இந்திய அரசாங்கத்தின் ஆதரவு பீகார் ராஜ்ய அரசாங்கத்தின் ஆதரவும் நிச்சயமாக இருக்கும் என்றும் கூற விரும்புகிறேன்.

* * *

டாடா எஃகுத் தொழிற்சாலை டெக்னிகல் டைரக்டர் ஸ்ரீ பரோஸ்த்தார் தமது பிரசங்கத்தில் தமிழ் மொழியின் சிறப்பை எல்லாம் கூறி ஜெம்ஷட்பூர் நகரில் வாழும் தமிழர்களுடைய தமிழ்த் தொண்டிற்கு வேண்டிய உதவிகளை டாடா கம்பெனி அளிக்கும் என்று குறிப்பிட்டார்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)